★ பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு
EELA NADU

மலர் 21 கார்த்திகை 27 முஹறம் 22 இதழ் 303
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 13-12-79

## எனக்கு இரத்த அழுத்தம் எப்படி ஏற்பட்டது?
### சபையில் 'நவம்'

(கொழும்பு)

"நான் பாராளுமன்றத்தில் பிரதமரைப் பாராட்டிப்பேசும்போது எனக்கு இருதய நோய் ஏற்பட்டதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்தது. நான் சுகவீனமுற்றது மாலை ஆறு மணிக்குத்தான். அப்போது நான் திட்ட அமுலாக்க அமைச்சின் குழுநிலை விவாதத்தில் யாழ் அரச உயர் அதிகாரியின் செய்கையைப்பற்றி கூறும்போது என் இரத்தம் கொதித்தது. இதனாலேயே எனக்கு இரத்த அழுத்தம் ஏற்பட்டது"

இவ்வாறு நேற்றுக்காலை பாராளுமன்றத்தில் உரையாற்றிய சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் "நான் இச்சபையில் கொழும்பு பெரியாஸ்பத்திரி இருதய சிகிச்சைப்பிரிவு பற்றி குறிப்பிடாவிட்டால் நன்றி கெட்டவனாவேன். இப்பிரிவுக்கு நான் இருமுறை சென்றேன். நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் ஒருமுறை தான் சென்றனர். எனவே எனக்குத்தான் கூடிய அனுபவம் உண்டு.

"லண்டன், சரசன் ஆஸ்பத்திரிகளின் இருதய சிகிச்சைப்பிரிவு ஏற்பாடுகளை [illegible] இருதய சிகிச்சைப்பிரிவு இவை கொழும்பு பெரியாஸ்பத்திரி இருதய சிகிச்சைப்பிரிவுடன் ஒப்பிடும்போது, இயந்திரசாதனங்கள் குறை

(8-ம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் ஆஸ்பத்திரி

## அமைச்சர் வாக்குறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் விரைவில் புற்றுநோய் ஆஸ்பத்திரி நிறுவப்படும் என சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியா நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் உடனடியாக புற்றுநோய் ஆஸ்பத்திரி நிறுவப்படவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கேட்டபோது குறுக்கிட்டுப்பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

காலியிலும் ஒருபுற்றுநோய் ஆஸ்பத்திரி அமைக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (இ)

## 'அமிர்' கோரிக்கை

(கொழும்பு)

'யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் அதிகரித்து வருகின்றது. யாழ்ப்பாணத்தில் ஒரு புற்றுநோய் ஆஸ்பத்திரி நிறுவப்பட வேண்டும்'.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் நேற்று பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தின்போது பேசுகையில் கூறினார். அவர் மேலும் கூறியதாவது!

"வெளிநாட்டு டாக்டர்களுக்கு இங்கு வழங்கும் வசதிகள் உள்நாட்டு டாக்டர்களுக்கு வழங்கப்படுவதில்லை. இந்நிலை நீடிக்கப்படும் பட்சத்தில் டாக்டர்கள் வெளிநாடு செல்வதைத் தடுக்கமுடியாது"

## காலை நேரத்தில் தொடர்ந்து மழை?

(கொழும்பு)

இவ்வாரம் முழுவதும் காலநிலை சீராக இருக்கமாட்டாது என்று வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் காலைநேரங்களில் அடைமழை பெய்யுமென்றும் வானிலை அவதான நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் திரு ஜே. கி. காரியவாசம் தெரிவித்தார்.

வடகிழக்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றினால் வடக்கு கிழக்கில் பெருமழை பெய்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு பஸ்சேவை வெள்ளத்தினால் ரத்து

(யாழ்ப்பாணம்)

வெள்ளம் காரணமாக மட்டக்களப்பு யாழ்ப்பாணம் பஸ் சேவை ரத்துச்செய்யப்பட்டுள்ளது. அநேக இடங்களில் வீதிகள் வெள்ளத்தினால் மூழ்கியிருப்பதனால் இச்சேவை ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

மருதங்கேணி ஆழியவளை

(8ம் பக்கம் பார்க்க)

## அண்ணாவின் மைந்தன் அ.தி.மு.க.வில் சேர்ந்தார்!

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழக ஸ்தாபகரும், தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சருமான திரு சி. என். அண்ணாதுரையின் மைந்தன் திரு சி. என். ஏ. கௌதமன், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக அ. இ. அ. தி. மு. கழகத்தின் தலைமைச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் திரு கௌதமனும் திருமதி கௌதமனும் செவ்வாய்க்கிழமை, தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் முன்னிலையில் அ. இ. அ. தி. மு. கழகத்தில் சேர்ந்துகொண்டனரென்று தெரிவித்துள்ளது.

## தமிழ்நாடு வாக்காளர் எண்ணிக்கை குறைவு!

(சென்னை)

தமிழ்நாட்டில் வாக்காளர் எண்ணிக்கை தற்போது இரண்டு ஐந்து சதவிகிதத்தால் குறைந்து இருப்பதாக தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

1977-ல் நடைபெற்ற தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலின் வாக்காளர் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை 1,67,428 ஆக குறைந்திருக்கும் அதே நேரத்தில் ஆண் வாக்காளர்களின் எண்ணிக்கையில் 1,78 388 குறைவு காணப்படுகின்றது. 1977-ல் நடைபெற்ற தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலின் வாக்காளர் எண்ணிக்கையுடன் இன்றுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையை ஒப்பிட்டுப்பார்க்கும்போது 70,965 வாக்காளர்கள் குறைந்திருக்கின்றனர்!

எதிர்வரும் லோகசபை இடைக்காலத் தேர்தலுக்கான தமிழ்நாடு வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை 2 கோடி 81 லட்சத்து 2377 ஆகும்.

## தோட்டத் தொழிலாளர் சம்பளப்பணம் ரூ.24,000 கொள்ளை!

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப்பணம் ஒரு லொறியில் பாய்ந்த கொள்ளையர்களாற் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது!

இச்சம்பவம், ஹட்டனில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

ஹட்டனிலுள்ள தோட்டம் ஒன்றுக்கு லொறியில் எடுத்துச் செல்லப்பட்ட 24 ஆயிரம் ரூபாவே கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

தோட்டத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறி ஒரு வளைவில் மெதுவாகத் திரும்புகையில் ஆயுததாரிகளுடன் லொறியில் பாய்ந்தேறிய இருவர், லொறியிலிருந்தவர்களை பயமுறுத்தி பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றனர். வழியில் பதுங்கியிருந்த இன்னுமொருவரும் முதலில் ஏறிய இருவருடனும் இணைந்தே இக்கொள்ளையை நடத்தியதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

## அ.இ.அ.தி.மு.க. வானொலி உரை

அனைத்திந்திய அண்ணா தி மு கழகத்தின் சார்பில் தமிழ்நாடு நிதி அமைச்சர் நாஞ்சில் கி மனோகரன் நிகழ்த்திய லோகசபை தேர்தல்பிரசார வானொலி உரை நாளைய 'ஈழநாடு' இதழில் விபரமாக வெளிவரும்.

## கொழும்பிற்கு லொறிகள்மூலம் உரம் கொண்டு செல்லல்

மேற்படி சேவையில் ஈடுபட்டுள்ள லொறிகளின் உரிமையாளர்கள் உரக்கூட்டுத்தாபன போக்குவரத்துப் பத்திரத்துடன் 16-12-79 காலை 9-00 மணி முதல் எமது அலுவலகத்தில் கூலிப் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் உரம் தொடர்ந்தும் கொழும்பிற்குக் கொண்டு செல்லப்படுவதால் தங்கள் லொறிகளையும் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**க. ஜெயபாலசிங்கம் அன்ட் கம்பனி**
காங்கேசன்துறை.
தொலைபேசி: 34 அல்லது 800

## இலங்கை இளங்கலைஞர் மன்றம் அறிவித்தல்

12-1 1980ல் நடைபெறவுள்ள டாக்டர் எம், பாலமுரளி கிருஷ்ண அவர்களின் இசை நிகழ்ச்சிக்குரிய பின்வரும் தொடர் இலக்க பிரவேசச் சீட்டுக்கள் தவறிவிட்டன.

| | |
|---|---|
| 100 ரூபா | 411 -- 420 |
| 50 ரூபா | 462 -- 470 |
| 25 ரூபா | 1230 -- 1250 |

கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நல்லூர் கந்தசுவாமி கோவிலடி "வைற்கபினில்" ஒப்படைக்கவும்.

செயலாளர்

4367

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பலசரக்கு வியாபாரத்துக்குரிய தளபாடங்களும் சாமான்களும் விற்பனைக்கு உண்டு விபரங்கட்கு, திரும் குமரன், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் 4331

இருபாலை வீதியில் உள்ள சோண்டாவில் இழக்கு, வலவியர்ச்சம் வீதியில் கிணற்று வசதிகளுடன் கூடிய 3½ பரம்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு க. அமிர்தலிங்கம் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும் 4359

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் கண்டி வீதி அரியாலையில் 2 பரப்பு (நிலம் பரம்பு) 10 3 குளியும். தொடர்பு 265, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 4354

### தேவை

பலசரக்கு வியாபாரத்தில் அனுபவம் உள்ளவரும், யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவரும், 20-25 வயதிற்கு உட்பட்ட திருமணம் ஆகாத ஆள் தேவை. உடன் தொடர்புகொள்ளவும். தஞ்சனுஸ்ரோரின், பரமசாமி வீதி, இன்னக்கடை, யாழ்ப்பாணம் 4358

விஜயாப்பூப் பொருட்கள் உற்பத்திசெய்யும் தொழில் மொன்றிற்கு கடைக்கு வேலை தெரிந்தவர்களும், பழக விரும்புவோரும் விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவுத் திகதி 20-12-79 விளம்பர இல 4357 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் 4357

### ஏலவிற்பனை

திருமதி P. சோமசுந்தரம் அவர்களிடம் 2-8-71 முதல் 31-7-78வரை அடைவுவைத்து மீளாத நகைகள் யாவும் 1979 டிசம்பர் 28ந் திகதி மாலை 2-30 மணியளவில் கொழும்பு மொசன்ஜர் வீதி, 174 இலக்க கடையில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

N M A C அப்துல் ஹமீது அன் சன்
4340 ஏலதாரர்

## நாவற்குழி கிராம சபை
## கேள்வி
## விளம்பரம்

1 கல்லுபரணன் சோட்டை வீதி

நாவற்குழி கிராமசபையின் விசேட ஆணையாளராகிய என்னால் 24-12-79 காலை 9-00 மணிவரை மேற்படி வேலைக்கு சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் பதிவுத் தபால் மூலம் எனக்கு அனுப்பப்படுவதுடன் அந்நேரத்தில் அதன் நகல் பிரதியொன்று யாழ்ப்பாண உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். கேள்வி அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் தெளிவாக எழுதப்பட்டிருத்தல்வேண்டும்.

கேள்விப் பத்திரப் பணம் ரூபா 25/-ம் பிணைப் பணம் ரூபா 100/-ம் செலுத்தியதன் பேரில் என்னால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரங்களிலேயே கேள்விகள் அனுப்பப்படுதல்வேண்டும். கேள்விப்பத்திரப் பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

கேள்விப் பத்திரங்கள் 1979ஆம் வருடம் டிசம்பர் மாதம் 13, 18, 20 ஆகிய திகதிகளில் மாத்திரமே வழங்கப்படும்.

மேலதிக விபரங்களைச் சபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

சொ. கணேசநாதன்,
விசேட ஆணையாளர்,
நாவற்குழி
கிராமாட்சி மன்றம்

நாவற்குழி
கிராமாட்சி மன்றம்,
நாவற்குழி, சாவகச்சேரி
..-12-79 4360

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

அளவெட்டி தெற்கு காலஞ் சென்ற சுப்பிரமணியம் கந்தையா என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்
அளவெட்டி தெற்கு சுப்பிரமணியம் கந்தையா மனைவி சீதாதேவி

மனுதாரர்

மரணசாதன)
நியாயாதிக்கம்) இல. 50

எதிராக

1. இராமுப்பிள்ளை மகள் இரத்தினமயிலு
2. சுப்பிரமணியம் கந்தையா மகள் பெண் பாறுபதிவள்ளை.
3. கந்தையா இரத்தினவேல் - எல்லோரும் அளவெட்டி தெற்கு

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதன் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதிவப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு தை மாதம் 25-ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
மூ. நல்லலிங்கம்,
பதிவாளர்.

1979ம் ஆண்டு ஐப்பசி மாதம் 26ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. என்னால் வரையப்பட்டது.

செ. இராமலிங்கம்,
மனுதாரரின் சட்டத்தரணி 4305

வரைவு!
வ. முத்துக்குமாரசுவாமி
சட்டத்தரணி.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ் சென்ற இருபாலையைச் சேர்ந்த இராசாவைப்பெண் செல்லம்மா என்னும் மாணிக்கம் என்பவர் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்
கந்தையா செல்லத்துரை இருபாலை கோப்பாய்

மனுதாரர்

மரணசாதன
நியாயாதிக்கம் } இல 3468

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980ம் ஆண்டு தை மாதம் 11ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்

1979ஆம் ஆண்டு மார்கழி மாதம் 5ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது 4355

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழ இல: சகு/2400

சின்னையா பிரகாசம்,
34, கோணேசர் வீதி, திருகோணமலை.

வாதி

எதிராக

1. முத்துத்தம்பி மங்களேஸ்வரன்
2. மங்களேஸ்வரன் பெண் யோகராணி இருவரும் சுன்னாகம் தற்பொழுது ந. அளவேந்திரன். மேற்பார்த்து, பலாலி ரோட், கோப்பாய் தெற்கு கோப்பாய்.
3. சின்னத்துரை மகேந்திரன், குராவத்தை, சுன்னாகம்.

பிரதிவாதிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் சகு/2400-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணி 1980-ம் ஆண்டு ஜனவரி மாதம் 18-ந் திகதி (18-1-1980) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த பிரதிவாதிகள் குறித்த வாதிக்கு முதலும் வட்டியும் ரூபா 3200/-ம் மேற்கொண்டு ரூபா 2000/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 10% வட்டி வீதம் 30-5-78லிருந்து 3-5-79 வரைக்கும் அதன்பின் இறுக்கும்வரைக்கும் முழுத்தொகைக்கும் வருடமொன்றுக்கு 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 504/95 சகிதம் கொடுத்தல் வேண்டும்.

### குறித்த ஆதனகாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி பல்லாகம் கோவிற்பற்று ஏழாலை இறை வெளி [illegible] நிலப்பரப்பு மூன்றுக் (நி ப. 3) கிணறு வீடுகளும் பயிர்வகைகளும், கிழக்கெல்லைக்காணியின் தெற்கெல்லையாகப் பொழுதுக்குப் போக்குவரவு செய்யும் பாதையுரித்துக், எல்லை கிழக்கு கையொழுங்கை, வடக்கு கந்தையா பெண் நாகமுத்து இறுதனம், மேற்கு மயிலு கைக்கிபெண் கதிராச்சியிறுதனம் தெற்கு நமசிவாயம் பெண் ஆச்சிப்பிள்ளையிறுதனம், இதில் மறுபகுதியாளருக்குரிய தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால்பாவிப்புரித்தும் புறநீங்கலாக இடங்கலிந்து சொரியாம் (2/5) ஐந்தில் இரண்டு பங்கும் அதற்குரியவைகளும்;

பிரான்சிஸ் எக்ஸ் ஜோக்கிம்,
நீதிமன்ற விற்பனையாளரும்
விலைமதிப்பாளரும்

"சிவமன்றம்",
தெல்லிப்பளை,
10-12-79 4356

சாவகச்சேரி

## நகராட்சி மன்றம்
## ஆதனவரி அறிவித்தல்

1979ம் ஆண்டு 4ம் காலாண்டிற்குரிய ஆதனவரியை 1979ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்பாகச் செலுத்தும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன். இத்தவணைக்குப்பின் செலுத்தப்படும் வரியுடன் வசிப்பிட வளவுகளுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் பதினைந்து வீதமும் (15%) ஏனைய ஆதனங்களுக்கு இருபது வீதமும் (20%) மேலதிகக் கட்டணம் சேர்த்து அறவிடப்படும்.

ஒவ்வொரு காலாண்டுக் கட்டுப்பணமும் அக்காலாண்டு முடிவுறும் இறுதி மாதத்தின் இறுதி வேலைநாளின் நண்பகல் 12-00 மணிக்கு முன்பாகச் செலுத்தப்படவேண்டும் என்பதையும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

த. நவரத்தினராசா,
செயலாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
10-12-79 4361

## நடவடிக்கை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்குப் பகுதியில் உள்ள கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் பொதுமக்களின் வசதியை முன்னிட்டு மண்ணெண்ணை விநியோகிக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு நெடுந்தீவு பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதியவர் திரு. நா. இலட்சுமணராசா பொது முகாமையாளரைப் பணித்துள்ளார்.

## கொடிகாமம் மத்திய சந்தை குத்தகை-1980

மேற்படி சந்தைக் குத்தகைக்குரிய கேள்விகள் 21-12 79 வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 18-12-79வரை வழங்கப்படும். கேள்விப் பிணைப்பணமாக ரூ 1000/-ம், பத்திரப் பணமாக ரூ 25/-வும் அறவிடப்படும். ஏனைய விபரங்களுக்கு கி. ச. சந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

சு. முருகவேள்,
விசேட ஆணையாளர்
கச்சாய் கிராமசபை
மன்றப் பகுதி,
கொடிகாமம்.
1979-12-04 4365

## யாழ். றேட்டறி தொழிற் பயிற்சி நிலையம்

மூங்கில் - பிரம்பு - பிளாஸ்ரிக் ஆகியவற்றில்
### கைப்பணிப் பயிற்சி

றேட்டறிக் கழகத்தின் ஆதரவில் இந்தியாவில் பயிற்சி பெற்ற ஆசிரியையின் உதவியுடன், யாழ். றேட்டறிக் கழகம் மிகவும் நுட்பமான கைப்பணி வேலைப்பாடுகளை யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பெண்பிள்ளைகளுக்குப் பயிற்றுவிக்கத் தொழிற்பயிற்சி நிலையமொன்றை ஆரம்பிக்க முன்வந்து, அவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரியுள்ளது.

பின்வரும் குறிப்புகளுக்கிணங்க எவரும் இதற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பஞ் செய்வோர் கவனிக்கவேண்டியவை:

1. வயது 16க்கு மேற்பட இருத்தல் வேண்டும்.
2. க. பொ. த சாதாரண வகுப்பில் படித்திருக்க வேண்டும்
3. தெரிவு செய்யப்படுவோருக்கு இப்பயிற்சிக் காலம் தேவைப்படும் போக்குவரத்துச் செலவு கொடுக்கப்படும்.
4. இத்தெரிவில் 1977-ம் ஆண்டு இனக்கலவரத்தால் பாதிப்புற்று இப்பொழுது யாழ். மாவட்டத்தில் வசிக்கும் பிள்ளைகளுக்கு முதலிடம் கொடுக்கப்படும்
5. மூன்று மாதம் பயிற்சியளிக்கப்பட்டுத் திறமையாகப் பழகுவோருக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.
6. விண்ணப்பங்களை 29-12-79க்கு முன்னர் றேட்டறியன் பா. சோ. பாரதி, பல்வைத்தியசாலை, 568, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். (4364)

அமரர் செ. தனபாலசிங்கன் அவர்களின்

## நினைவுச் சொற்பொழிவு

உரும்பராய் சந்திரோதய வித்தியாலயத்தில்
இன்று 13-12-79 மாலை 5-30 மணிக்கு

### திரு. மூ. பசுபதி

தலைமையில் நடைபெறவிருக்கிறது.

சிறப்புச் சொற்பொழிவு:
ந. ரா. முருகவேள் M A, M O L

ஆசியுரை:
நல்லை ஆதீனம்

(4362) தனபாலசிங்கன் நினைவுக்குழு.

# இந்திய 7-வது பாராளுமன்றம் ஜனவரி 25-ல் கூடும்

## 532 தொகுதிகளில் 6,750 பேர் வேட்புமனு

புதுடில்லி, டிச 12 இந்தியாவின் 7வது பாராளுமன்றம் ஜனவரி மாதம் 25ம் திகதி கூடும்.

இந்திய லோகசபைக்கான தேர்தல்கள் ஜனவரி மாதம் 3ம் திகதியும் 6ம் திகதியும் நடைபெறுகின்றன.

542 லோகசபைத் தொகுதிகளில் அஸாம் மாநிலத்தில் உள்ள 10 தொகுதிகள் தவிர்ந்த ஏனைய 532 தொகுதிகளில் மட்டுமே தேர்தல் நடைபெறுகின்றது.

532 தொகுதிகளுக்கும் 6750 வேட்பாளர்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். கடந்த 77ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் 542 தொகுதிகளிலும் 4,300 பேர் மட்டுமே போட்டியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# ஜனதா பதவிக்குவந்தால் ஜெகஜீவனே பிரதமர்

## சரணின் கூற்றுக்கு தேசாய் மறுப்பு

புதுடில்லி, டிச. 12 எதிர்வரும் இந்திய இடைக்காலத் தேர்தலில் ஜனதா பதவிக்கு வந்தால் திரு. ஜெகஜீவன்ராமே பிரதமராகப் பதவியேற்பார்.

இவ்வாறு மொரார்ஜி தேசாய் உறுதியாகக் கூறினார்.

ஜனதா கட்சி பதவிக்கு வந்தாலும் திரு. ஜெகஜீவன்ராமுக்கு ஒருபோதும் பிரதமர் பதவி வழங்கப்படமாட்டாது என்று பிரதமர் திரு சரண்சிங் கூறினார். இக்கூற்று முற்றிலும் தவறானது, சுயநலம் பொருந்தியதென்றும் திரு. தேசாய் கூறினார். (இ)

# விஸ்வ ஹிந்து பரிஷத்

(யாழ்ப்பாணம்)

'விஸ்வ ஹிந்து பரிஷத்' எனப்படும் உலக இந்து மகாசபை நிறுவனத்தின் கொள்கைகளையும் செயற்பாடுகளையும் தேசந்தழுவிய ரீதியில் ஈழத்திலும் ஆரம்பிப்பதற்கான முன்னோடி முயற்சிகளை அதன் யாழ்ப்பாணக் கிளைத் தலைவர் திரு யோகேந்திரா துரைசுவாமி மேற்கொண்டு வருகின்றார். மனிதாபிமான உணர்வோடும் மதாபிமானத்தை வளர்த்தெடுப்பதையே தலையாய பணியாகக் கொண்டுள்ள இவ்வுலக இந்து மகாசபையின் சமூகப்பணி பற்றியும் அதன் நோக்கம் பற்றியும் இந்து மக்களுக்கு நன்கு உணர்த்தப்படவேண்டும் என்ற அளவில் அதன் யாழ்ப்பாணக்கிளை பல பயனுள்ள பணிகளை மேற்கொண்டுவருகின்றது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் இச்சபையின் போஷகராகவும் உள்ளார். (நா)

# தமிழகத்தில் எட்டு வேட்பு மனுக்கள் நிராகரிப்பு

## 4 பெண்கள் போட்டி

சென்னை, டிச. 12 தமிழ்நாடு - புதுச்சேரி 40 லோகசபைத் தொகுதிகளுக்கும் தாக்கல் செய்யப்பட்ட 450 வேட்பு மனுக்களில் 8 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

மூன்று கட்டணிகளைச் சேர்ந்தவர்களும் சுயேச்சைகளுமாக 442 பேர் இங்கு போட்டியிடுகின்றனர்.

ஒரு சுயேச்சை வேட்பாளரினதும் ஜனதா, அ. தி. மு. க., உத்தியோகபூர்வ காங்கிரஸ் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 3பேரினது மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

### 3ம், 6ம் திகதிகளில் தேர்தல்

தமிழ்நாட்டில் உள்ள 19 தொகுதிகளில் ஜனவரி மாதம் 3ம் திகதியும் மிகுதி 20 தொகுதிகளில் ஜனவரி மாதம் 6ம் திகதியும் தேர்தல் நடைபெறுகிறது.

### 4 பெண்கள் போட்டி

இங்கு 4 பெண்கள் போட்டியிடுகின்றனர். இந்திரா காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், காந்தி காமராஜர் தேசிய காங்கிரஸ் கட்சிகளின் சார்பிலேயே 4 பெண்கள் போட்டியிடுகின்றனர் (இ)

# தமிழக கட்சிகளுக்கு அரசியல் ஸ்திரம் இல்லை

## பட்வாரி கருத்து

சென்னை, டிச 12 தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளுக்கு அரசியல் ஸ்திரம் கிடையாது.

இவ்வாறு தமிழக கவர்னர் திரு பிரபுதாஸ் பட்வாரி தெரிவித்துள்ளார்.

தமிழக அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில், கட்சி மாறல் சாதாரணமாகி விட்டது என்றும் அதிக பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதாக அரசியல்கட்சிகளுக்கு எப்படியோ ஆட்சிநடத்த முடிகிறது என்றும் அவர் கூறினார். (இ)

# நிதியுதவி

(சுழிபுரம்)

யாழ் சமூக சேவைப் பகுதியினர் வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள சித்தன்கேணிக் கிராமத்திலுள்ள ஒருவருக்கு பொதுசன உதவி புனர்வாழ்வுத் திட்டத்தின்கீழ் தொகையை 750 ரூபாவை வழங்கியுள்ளனர் (சு)

# திண்டுக்கல்லில் மாயத்தேவர்

சென்னை, டிச. 12 அ தி மு க விலிருந்து விலகி அண்மையில் தி மு க வில் சேர்ந்து கொண்ட திரு மாயத்தேவர் எதிர்வரும் லோகசபைத்தேர்தலில் திண்டுக்கல் தொகுதியில் தி மு க வின் சார்பில் போட்டியிடுகிறார். (இ)

# எகிப்து-- இஸ்ரேல் தூதுவர் பரிமாற்றம்

கெய்ரோ, டிச 12 1980ம் ஆண்டு பெப்ரவரியில் எகிப்தும் இஸ்ரேலும் தூதுவர்களைப் பரிமாறிக்கொள்ளும் என்று எகிப்திய ஜனாதிபதி ஜனாப் அன்வர் சதாத் தெரிவித்துள்ளார். (இ)

# 14 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

(புலோலி)

புலோலிக்குளம் கனிஷ்ட வித்தியாலயத்தின் சேதமடைந்த கட்டிடத்தைத் திருத்துவதற்கு 14,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கட்டிடத் திருத்த வேலையைப் பாடசாலை அபிவிருத்திச் சபை பொறுப்பேற்று நடாத்தவுள்ளது (பு)

# ஈரானைக் கைப்பற்ற அமெரிக்கா முயற்சி

## கொமெய்னி குற்றச்சாட்டு

தெஹ்ரான், டிச. 12 ஈரானைக் கைப்பற்ற அமெரிக்கா முயல்கிறது என்று புரட்சித் தலைவர் அயத்தொல்லா கொமெய்னி தெஹ்ரானில் மாணவர்கள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

அமெரிக்காவின் பயமுறுத்தலுக்கு ஈரான் ஒருபோதும் அடிபணியமாட்டாது என்றும் அமெரிக்க பணயக் கைதிகள் விவகாரத்தில் ஈரான் தனது முன்னைய முடிவை ஒருபோதும் மாற்றாது. ஷாவை ஈரானுக்குத் திருப்பி அனுப்பினால் மட்டுமே பணயக் கைதிகள் பற்றி பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் கொமெய்னி கூறினார். (இ)

# "சைவர்களை வாழவைத்தவர் நாவலர்"

(யாழ்ப்பாணம்)

"தமிழர் சைவரென்ற வகையில் நம்மை வாழவைத்தவர் நாவலர் பெருமான். அவரது அரிய சேவையினாலேயே நாம் புறச் சமயம் புகாது சைவர்களாக வாழ்கின்றோம். நம்மை திருநீறு பூசவைத்தவர் நாவலர் ஐயா. அவரது குருபூசைத் தினத்தை கோலாகலமாகக் கொண்டாடினால் மட்டும் போதாது. அவர் வழி வாழவேண்டும்"

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற நாவலர் நூற்றாண்டு நினைவு தின விழாவில் பேசிய வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. வி. அரியநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் நாவலர்சிலைக்கு விசேஷ பூசை நடைபெற்றது.

பிரதி அதிபர் திரு. வி. பஞ்சாட்சரம் பேசுகையில் "நாவலரின் ஆத்மசக்தி, அவர் சிவபதமடைந்து நூறாண்டுகள் 

(7-ம் பக்கம் பார்க்க)


# வடபகுதியில் முதலாம தரம்

(சுழிபுரம்)

தொல்புரம் அரசினர் வைத்தியசாலை, வடபகுதியிலுள்ள மத்திய வைத்தியசாலைகள் தரத்தில் முதலாவது இடத்திலுள்ளது

சுகாதாரப் பகுதியினரால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபம் மூலமாக இவ் விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


பெற்றர் டீசல் எஞ்ஜின்கள்



விசேட 20% தள்ளுபடிக்கு, குறிப்பிட்டளவு கையிருப்பு மட்டுமேஉண்டு.

பெற்றர் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு சிறந்த விதி முறைகளுடன் வங்கிக்கடன்கள் ஒழுங்கு செய்ய உதவி புரியப்படும்.

தொடர்பு கொள்க:-
பொறியியல் விற்பனை,
பராமரிப்புப் பகுதி,

மகாராணியின் தொழிற்துறை விருது பெற்றது.

ஒரு ஹேக்கர் சிட்லி கம்பனி

ஹேலீஸ் லிமிட்டெட்,
25, பொஸ்டர் ஒழுங்கை, கொழும்பு 10,
தொலைபேசி: 96331-6 இணைப்புகள்.

melADS

2வது வாரம் இன்னும் சில தினங்களுக்கு மட்டும்
REGAL (Jaffna) Daily at 2.00, 4-30, 7-00 & 9-30 p.m.
PAUL NEWMAN BURT REYNOLDS in
"SILENT MOVIE"
(Color)
குழந்தைகள் முதல் பெரியோர்வரை பார்த்து சிரித்து மகிழவேண்டிய படம்

வின்ஸர் தினசரி 10 30, பி.ப.2-30 யாழ்ப்பாணம் 6-30, 9-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி நடித்த
என் கடமை
(புதிய பிரதி)

75-வது வெற்றித் திருநாளை நோக்கி
ஸ்ரீதர் தினசரி காலை 10-30, பி.ப 2 30, 6-15, 9-45
(யாழ் நகர்) சிவாஜிகணேசன் - சுஜாதா நடித்த
(வெள்ளிவிழாச் சித்திரம்)
தீபம்
(வர்ணக்கலர்)


ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) இன்று மட்டும்
விஷ்ணுவர்த்தன் - சந்திரகலா
அலைகள் (புதிய பிரதி)
14-ந் திகதிமுதல் அன்னக்கிளி

RANEE - Jaffna
Daily 5 Shows at 10-30 a.m. 2-15, 4-45, 7-15 & 9-45 p.m.
எப்போ வருமென எதிர்பார்த்திருந்த சினிமா ரஸிகர்களுக்கு இதோ வந்துவிட்டது.
கிளின்ற் ஸ்ட்வூட்டின்
"கை பிளேன்ஸ் றிவ்ப்ரர்"
Clint Eastwood in
"High Plains Drifter"
Full of Action (adults only) (Color - Scope)

75-வது வெற்றித் திருநாளை நோக்கி ஓடுகிறுள்!
மனோஹராA யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
வாணி சுஜாதா, சந்திரமோகன், கவிதா, நடித்த
அந்தமான் காதலி
(வண்ணப்படம்)

வெலிங்டன் தினசரி 3 காட்சிகள் சனி-ஞாயிறு 4 காட்சிகள்
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
குமரிப்பெண்
(புதிய பிரதி)
லிடோ போன்: 7698 தினசரி 4 காட்சிகள் (யாழ்.நகர்)
அபிமான்
(ஹிந்தி)

டாக்ஸி விரைகிறது 75வது வெற்றித் திருநாளை நோக்கி......
சாந்தி யாழ்நகர். தினசரி 10-30, 2-30, போன்: 7642. 6-30, 9-45.
ஜெய்... ஸ்ரீதேவி... எம். ஆர். ராதா...
டாக்ஸி டிரைவர்
கண்ணைக் கவரும் உன்னத வண்ணச் சித்திரம்

காங்கேசன்துறை யங்ரேயல் நடத்தும்

'ஈழநாடு' வெற்றிக் கிண்ணத்துக்கான

# 64 கழகங்களைக்கொண்ட உதைபந்தாட்டப் போட்டி

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை யங்ரேயல் விளையாட்டுக்கழகத்தின் பதினோராவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடாத்தப் படவிருக்கும் 'ஈழநாடு' வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வடபகுதியைச் சேர்ந்த அறுபத்துநான்கு விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றியுள்ளன. இம்மாதம் பதினைந்தாந்திகதி காங்கேசன்துறைப் பட்டின சபை மைதானத்தில் ஆரம்பமாக இருக்கும் போட்டியில் தினமும் இரண்டு போட்டிகள் நடைபெறும்.

நான்கு பிரிவுகளாக நடாத்தப்படும் இச்சுற்றுப்போட்டியின் முதலாம் பிரிவில் பதினொரு பேர்கொண்ட போட்டியில் பதினாறு கழகங்களும் ஏழு பேர்கொண்ட போட்டியில் இருபது கழகங்களும் இரண்டாம் பிரிவில் பதினாறு கோஷ்டிகளும் மூன்றாம் பிரிவில் பன்னிரண்டு கோஷ்டிகளுமாகமொத்தம் 64 கோஷ்டிகள் பங்குபற்றியுள்ளன

இம்மாதம் பதினைந்தாம் திகதி ஆரம்பமாகும் இச்சுற்றுப்போட்டி தை மாதம் இருபதாம் திகதிவரை நடைபெறும். போட்டிகள் தினமும் மாலை 3-30 மணிக்கு ஆரம்பமாகும். எல்லாப்போட்டிகளுக்கும் யாழ்ப்பாணமாவட்ட உதைபந்தாட்டத் தீர்ப்பாளர் சங்கநடு நிலையாளர்களே உத்தியோகத்தர்களாகக் கடமை புரிவர்

போட்டிகளின் இறுதி ஆட்டத்திற்கு தெரிவுசெய்யப்படும் கழகங்களுக்கு 'ஈழநாடு' 'சலஞ்ச்' வெற்றிக்கிண்ணங்களும் எடுக்கப்படும் கேடயங்களும் அன்பளிப்புச்செய்யப்படும். இறுதிப்போட்டிக்குரிய ஆட்டங்கள் மின்னொளியில் நடைபெறும் கடந்த வருடத்தைவிட இவ்வருடம் இச்சுற்றுப்போட்டியில் பதினொரு கழகங்கள் கூடுதலாகப் பங்கு பற்றியுள்ளன வடமாகாணத்திலேயே இவ்வளவு தொகையான கோஷ்டிகள் பங்கு பற்றும் சுற்றுப்போட்டி இதுவாகும். ஏழுபேர் கொண்ட போட்டியின் இறுதிப்போட்டி போகியன்று நடைபெறும்

### பங்கு பற்றும் கழகங்கள்

முதலாம் பிரிவு- பதினொரு பேர் கொண்ட போட்டி:

வல்வெட்டித்துறை யூனைட், காங்கேசன்துறை ஒலிம்பிக், காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை போக்குவரத்து சமகம். இளவாலை ஞானோதயா, வல்வை நெடிய காடு இளைஞர், மல்லாகம் ஸ்ரீ முருகன், குப்பிளான் விக்னேஸ்வரா, மாதகல் செல்வா இளைஞர். இளவாலை உதயசூரியன், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம். யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார், மயிலிட்டி கண்ணகி, குருநகர் பாடும் மீன், பலாலி அண்ணா, தெல்லிப்பழை ஞானோதயா, இணுவில் இந்து இளைஞர், அயலூர்க் கழகங்கள்

முதலாம் பிரிவு 7 பேர் கொண்ட போட்டி:

வல்வெட்டித்துறை யூனைட் 'ஏ', காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை போக்குவரத்து சமகம், வல்வை நெடியகாடு, மயிலிட்டி கண்ணகி, காங்கேசன்துறை மகேஸ்வரி, பலாலி அண்ணா, பருத்தித்துறை ஐக்கிய வி. க, இளவாலை ஞானோதயா, இணுவில் இந்து இளைஞர், தெல்லிப்பழை ஞானோதயா, வல்வெட்டித்துறை யூனைட் 'பி', காங்கேசன்துறை ஒலிம்பிக், குருநகர் சென்ரல் வி. க, மல்லாகம் ஸ்ரீ முருகன், குருநகர் பாடும் மீன், இளவாலை உதயசூரியன். காங்கேசன்துறை பிறன்ஸ் இளம் யாழ்ப்பாணம் யாழ்ப்பாணம் ஜொனி ஸ்ரார், மாதகல் செல்வா இளைஞர், தையிட்டி பராசக்தி விளையாட்டுக் கழகம்.

இரண்டாம்பிரிவு- பதினொரு பேர்கொண்ட போட்டி:

ஊறணி புனித அந்தோனியார், வல்வெட்டித்துறை யூனைட், மாதகல் செல்வா இளைஞர், காங்கேசன்துறை பிறன்ஸ், பருத்தித்துறை ஐக்கிய வி. க, காங்கேசன்துறை ஒலிம்பிக், தெல்லிப்பழை வெலிங்ரன், கரவெட்டி வள்ளுவன், பலாலி அண்ணா, தெல்லிப்பழை ஞானோதயா, காங்கேசன்துறை சாந்தி, இளவாலை உதயசூரியன், தையிட்டி பராசக்தி விளையாட்டுக்கழகம்.

மூன்றாம் பிரிவு- 11 பேர்

(8-ம் பக்கம் பார்க்க)

## சைவர்களே...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாட்டை எங்கும் சாத்த சத்திபரலம் பரவிவருகிறது. நாவலர் பெருமானின் சமயப் பணி, கல்விப் பணி, சமூகப் பணி யாவுமே தெய்வீகமானவை. நாவலர் ஐயாவின் உண்மைச் சரித்திரம் திரிக்கப் பட்ட இடங்களையெல்லாம் சுட்டிக்காட்டி, அவரது உண்மைச் சரித்திரத்தை உலாதிய எடுத்துக்காட்டிய பெருமை பண்டிதர் ஐயா அவர்களையே சாரும்" என்றார்.

மாணவர்களின் திருமுறைப் பாராயணமும், நாவலர் பற்றிய பேச்சுக்களும் இடம்பெற்றன. (கொ-அ)


நாகம்ஸ் (கன்னாதல்)
தினசரி 6-45, 10-00, சனி, ஞாயிறு 2-45
ஜெமினி - சரோஜாதேவி
கல்யாணபரிசு

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 4-45 7-15,&9-45
சனி, ஞாயிறு 2-30
The Cassandra Crossing

RIO Jaffna Phone: 7607
Daily 4 Shows
CRAZY BOYS ARE BACK in
Hong Kong With Love'

